2018 ஜனவரி 9] **[திரு. என். சுரேஷ் ராஜன்]**

அதிகமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் போதுமான அளவிற்கு நிதியுதவிகளை வழங்க வேண்டும். இரப்பரைப் பொறுத்தமட்டில், 4 வழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்தும்போது, உங்களுடைய அரசாங்கம் இருக்கக்கூடிய அந்தக் காலக்கட்டத்திலேயே ஒரு இரப்பர் மரத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் இப்பொழுதும் அவர்கள் கேட்கிறார்கள். எனவே, ஒரு மரத்திற்கு 10,000 ரூபாய் கொடுத்தால்தான், விவசாயிகளின் வாழ்வு மகிழ்ச்சியாக அமையும். 7 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் அந்த மரத்திலிருந்து வருவாயை எதிர்பார்க்க முடியும். அதேபோன்று, சுமார் 3,000 ஹெக்டேரில் குலை தள்ளிய வாழை மரங்கள் முறிந்திருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு விவசாயச் சங்கத்தின் மூலமாகக் கடன் பெற்றவர்களிடமிருந்து, கடனைக் கட்டாயமாகத் திருப்பி வசூலிக்கக்கூடிய முறை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கும் உரிய கால அவகாசம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ் ராஜன் அவர்களுடைய உரை நிறைவு பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–1–2018) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை விதிகளை இயற்றியது குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நிதி அலகு, நிதி 1(1) பிரிவின் 20–9–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 298–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/2013) 111 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 30–7–2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/CTR/29/2008 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 20–2–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (டி2)த் துறையின் அரசாணை (2டி) எண் 6–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 29–10–2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவ/71(b)/2004 ஆம் எண் அறிவிக்கைக்கு வேறுபாடுகளை செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 20–7–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 85–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவக் கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம்–1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 6–9–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 748–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு தலைவரை நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (அ1)த் துறையின் 20–7–2017 ஆம் நாளிட்ட அரசாணை (வா) எண் 361–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (சி1) துறையின் 14–10–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 120–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2018 ஜனவரி 9]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2017) (ஆங்கிலம்)

2. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2017) (ஆங்கிலம்)

3. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2017) (ஆங்கிலம்)

4. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறைகளை எளிமைப்படுத்தும் அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2017) (ஆங்கிலம்)

5. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2017) (ஆங்கிலம்)

6. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2017) (ஆங்கிலம்)

7. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ்–ஆங்கிலம்)

8. 2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

9. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (2018). (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

10. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (2018). (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)